# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,895 — 1970 පෙබරවාරි 27 වැනි සිකුරාදා — 1970.2.27

14,895 ஆம் இலக்கம்—1970 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 61 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 65 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | 68 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. . | — |
| வரவு செலவுக் கூற்றுகள் .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### மாவனல்லைப் பட்டின சபை

பகிரங்க அரங்காட்டுக்கள் கட்டளைச் சட்டம்

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

ஆர். பிரேமதாசா,
உள்ளூராட்சி அமைச்சர்,

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 7 ந உ.

விதி

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1919 எப்ரல் 4 ந திகதிய 7,004 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டவையும், 1943 எப்ரல் 9 ந திகதிய 9,108 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதியினால் திருத்தப்பட்டவையுமான விதிகள், மாவனல்லைப் பட்டின சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள பிரதேசம் சம்பந்தப்பட்டவரையில் அவற்றின் அ. 3 என்னும் விதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய விதியை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

"அ. 3. கட்டணஞ் செலுத்துவதன் பேரில் அவற்றுக்கு ஆட்கள் அனுமதிக்கப்படும் பகிரங்க அரங்காட்டுக்களின் நோக்கத்திற்கு கட்டிடம் எதனையும் எழுப்புதற்கான உத்தரவுப் பத்திரம் ஒன்றுக்கு விண்ணப்பஞ் செய்யும் ஒவ்வொருவரும் உத்தரவுப் பத்திரம் வழங்கப்படுவதற்கு முன்பு இதனோடுள்ள அட்டவணையில் விதிக்கப்பட்டுள்ள கட்டணங்களைச் சபைக்குச் செலுத்தவேண்டும்.

| | ஒரு நாளைக்கு ரூ. ச. | ஒரு மாதத்திற்கு ரூ. ச. | (திசம்பர் 31 உடன் முடிவடையும்) ஒரு வருடத்துக்கு ரூ. ச. |
|---|---|---|---|
| 199 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 5 0 .. | 20 0 .. | 100 0 |
| 199 மேற்பட்டும் ஆனால் 399 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசனவசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 10 0 .. | 40 0 .. | 200 0 |
| 399 பேருக்கு மேற்பட்ட ஆட்களுக்கு ஆசனவசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 15 0 .. | 60 0 .. | 350 0." |

2–1103—27.2.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,895

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 14 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ.பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

## லுணுகலைப் பட்டின சபை

### பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டம்

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவினுல் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

ஆர். பிரேமதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆடு பெப்புருவரி மீ 7 ந உ.

### விதி

(176 ஆம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1919, எப்ரல் 4 ன் 7,004 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1943, எப்ரல் 9 ன் 9,108 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதியினுல் கடைசியாகத் திருத்தப்பட்ட விதிகள் லுணுகலைப் பட்டின சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள பிரதேசம் சம்பந்தப்பட்டவரையில் அவற்றின் அ. 3 ம் இலக்க விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களின் விகிதத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய விகிதத்தை வைப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன.

| | 9 தினங்களுக்கு மேற்படாத காலத்துக்கு (ஒரு நாளைக்கு) | 9 தினங்களுக்கு மேற்பட்டு ஆனல் 1 மாதத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு | 1 மாதத்திலிருந்து 6 மாதம் வரை | 7 மாதங்களிலிருந்து 10 மாதங்கள் வரை | 10 மாசங்களிலிருந்து ஒரு வருடம் வரை |
|---|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 199 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. .. .. | 3 0 | 15 0 | 30 0 | 60 0 | 100 0 |
| 199 பேருக்கு மேற்பட்டோருக்கு ஆனல் 399 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 5 0 | 25 0 | 50 0 | 100 0 | 125 0 |
| 399 பேருக்கு மேற்பட்ட ஆட்களுக்கு ஆசன வசதி செயயப்பட்டிருக்குமிடத்து .. .. .. | 10 0 | 50 0 | 75 0 | 125 0 | 150 0 |

2-1104—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

எல். டி.—பீ. 47/45

### மயானங்கள், அடக்கஸ்தலங்கள் கட்டளைச் சட்டம்

(231 ஆம் அத்தியாயமான) மயானங்கள் அடக்கஸ்தலங்கள் கட்டளைச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் ரணசிங்க பிரேமதாச ஆகிய நான், இதனேடுள்ள அட்டவணையில் இன்னும் கூடுதலாக வர்ணிக்கப்பட்டுள்ள அட்டன்–டிக்கோயா நகர சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள தரவெல்லையில் அவ்வெல்லைகளினுள் இறப்பவர்களைப் புதைப்பதற்கான அல்லது தகனஞ் செய்வதற்கான ஒரு பொது மயானத்தை இத்தால் நிறுவுகிறேன்.

ஆர். பிரேமதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆடு பெப்புருவரி மீ 7 ந உ.

#### அட்டவணை

கண்டி மாவட்டத்திலுள்ள அம்பகமுவைக் கோறளைக் காரியாதிகாரியின் பிரிவு, டிக்கோயா கிராம சேவகர் பிரிவுக்குள்ளும் அட்டன்–டிக்கோயா நகர சபையின் நிர்வாக எல்லைகளுக்குள்ளும் அமைந்துள்ள தரவெல்லைத் தோட்டத்திலிருந்து இரண்டு ஏக்கர் (ஏ. 2, ரூ. 0, பே. 0) விஸ்தீரணத்தைக் கொண்டதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான காணியின் அந்தப் பகுதி முழுவதும்.

வடக்கு : தரவெல்லைத் தோட்டத்தின் எஞ்சியுள்ள பகுதியினுல்.

கிழக்கு : தரவெல்லைத் தோட்டத்தின் எஞ்சியுள்ள பகுதியினுலும் தரவெல்லைத் தோட்ட மயானத்துக்குச் செல்லும் காலடிப் பாதையினுலும்.

தெற்கு : டிக்கோயா–தில்லிறீ பொது வேலைப் பகுதி வீதியினுல்.

மேற்கு : தரவெல்லைத் தோட்டத்தின் எஞ்சியுள்ள பகுதியினுல்.

2-1101—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

எல். டீ—பீ 11/51
எஸ்ஜீடீ/வ/வ்சி/உ/4/1

### இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 27 ம் பிரிவின் கீழ், அதற்கான தக்க அதிகாரத்தாபனத்தால், அதாவது மன்னர் மாவட்டத்து எருக்கலம்பிட்டிக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆடு பெப்புருவரி மீ 12 ந உ.

#### ஒழுங்கு விதிகள்

1. இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள பொதுக் கொல்களம் அல்லது அதற்காக அங்கீகரிக்கப்பட்ட இடம், சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் அல்லது அதன் பொருட்டு அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட பொது சௌக்கியப் பரிசோதகர் எவரதும் பொறுப்பில் இருக்கும். அவ்வுத்தியோகத்தரே அக்கொல்களத்தின் ஒழுக்காற்றுக்கும், சுகாதாரத்துக்கும் பொறுப்பாளியாவார்.

2. (1) எவரேனும் அக்கொல்களத்தில் எந்த விலங்கையும்—

(அ) அவ்விலங்கு சௌக்கிய வைத்திய உத்தியோகத்தராலேனும், அல்லது அதன் பொருட்டுத் தலைவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தராலேனும், பரிசோதிக்கப்பட்டு, மனித உணவுக்காகக் கொல்லுதற்கு ஏற்றதென்று அவ்வுத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி, அல்லது

(ஆ) எத்தினத்திலேனும் காலை 6.00 மணிக்கும் மாலை 6.00 மணிக்கு மிடையேயன்றிக்

கொல்லக்கூடாது.

எனினும், தலைவர் விசேடமான சூழ்நிலைகளில், இதில் சொல்லப்பட்டதல்லாத வேறு எவ்வேளையிலும் எவ்விலங்கையும் கொல்ல அதிகாரமளிக்கலாம்.

(2) எவரேனும் அக்கொல்களத்தில்—

(அ) பந்தி (1) ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து முப்பது மணித்தியாலங்கள் கழிந்தபின்னர் எந்நேரத்திலேனும், அல்லது

(ஆ) பந்தி (1) ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொல்களத்திலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட இடத்திலிருந்து உயிருடன் அப்புறப்படுத்தப்பட்டிருப்பின் மீண்டும் பரிசோதிக்கப்பட்டு அப்பந்தியின் கீழ் மனித உணவுக்காகக் கொல்லுதற்கு ஏற்றதென அங்கீகரிக்கப்பட்டாலன்றிக்

கொல்லக்கூடாது.

3. கொல்களவளவுக்குள் எவ்விலங்கையும் கொண்டுவரும் ஆள் ஒவ்வொருவரும், அவ்விலங்கு அவ்வளவில் நிற்கையில் அதற்குப் போதிய ஆகாரமும் நீரும் ஊட்டப்படுதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும்.

4. கொல்கள வளவுக்குள் எவ்விலங்கையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும், அவவிலங்கு கொல்லுதற்குத் தகுதியற்றது என்று நிராகரிக்கப்பட்டால், அவ்விதம் நிராகரிக்கப்பட்டவுடனே அவ்விலங்கை அவ்வளவிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும் அல்லது அப்புறப்படுத்துவிக்கவேண்டும்.

5. 2 ம் ஒழுங்குவிதியில் சொல்லப்பட்ட உத்தியோகத்தர் எவரும், எவ்விலங்கையும் அது அவ்வொழுங்குவிதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நோயுள்ளதாக அல்லது மனித உணவுக்காகக் கொல்லுதற்குத் தகுதியற்றதாகக் காணப்பட்டால் அது கொல்லப்படுவதைத் தடை செய்யலாம்.

6. கொல்களத்தில் கொல்லப்பட்ட எந்த விலங்கினதும் இறைச்சி அல்லது கழிவு இறைச்சி நோயுள்ளது அல்லது மனித உணவுக்குத் தகுதியற்றது என்று 2 ம் ஒழுங்கு விதியில் சொல்லப்படும் உத்தியோகத்தர் எவரும் அபிப்பிராயப்படுவாரேல் அவ்விறைச்சியை அல்லது கழிவு இறைச்சியை உடனே அழித்துவிடும்படி அல்லது அந்த இறைச்சி அல்லது கழிவு இறைச்சி விற்பதற்கு வைக்கப்படுவதனை அல்லது மனித உணவுக்கென உபயோகிக்கப்படுவதனைத் தடுக்கக்கூடியவிதத்தில் ஒழித்துவிடச்செய்யவேண்டும்.

7. கொல்களத்தில் அப்பொறுப்பு உத்தியோகத்தர், மனித உணவுக்குத் தகுதியானதென அங்கீகரிக்கப்படாத அல்லது 5 ம் ஒழுங்குவிதியின் ஏற்பாட்டின்படி கொல்லுவது தடுக்கப்பட்ட எவ்விலங்கையும் கொல்ல அனுமதித்தல் கூடாது.

8. (1) 2 ம் ஒழுங்குவிதியில் சொல்லப்பட்ட உத்தியோகத்தர் எவரதும் பணிப்புரையின் பேரிலன்றி 6 ம் ஒழுங்குவிதியின் கீழ் மனித உணவுக்குத் தகுதியற்றதென்று அறிவிக்கப்பட்டுள்ள இறைச்சி அல்லது கழிவு இறைச்சி எதையும் கொல்களத்தில் இருந்து எவரும் அப்புறப்படுத்தக்கூடாது.

(2) மனித உணவுக்கான எவ்விலங்கினதும் சடலத்தை, அச்சடலத்தின் முன்பாகத்திலும் பின்பாகத்திலும் கொல்களப் பொறுப்பு உத்தியோகத்தரால் "வி. ச. எ." என்னும் அடையாளமும், விடயத்திற்கேற்ப "மாட்டிறைச்சி" அல்லது "ஆட்டிறைச்சி" என்னும் சொற்களும் முத்திரை குத்தப்பட்டிருந்தாலன்றி, கொல்களத்தில் இருந்து எவரும் அப்புறப்படுத்தக் கூடாது.

9. ஒரு விலங்கு வேறு எந்த விலங்கினதும் முன்னிலையில் அல்லது அவ்வளவில் அதற்கு முன்னர் கொல்லப்பட்ட ஒவ்வொரு விலங்கினதும் சடலம் அவ்வளவிலிருந்து அப்புறப்படுத்தப்படும் வரை கொல்லப்படாது.

10. (1) இதில் இனிவரும் ஏற்பாட்டிற்கமைவாக, கொல்களத்தை உபயோகிப்பதற்குக் கீழ்க்காணும் வீதங்களில் கட்டணம் ஒன்று விதிக்கப்படும் :—

| | ரூ. ச. |
|---|---|
| ஒவ்வொரு மாட்டிற்கும் .. | 1 50 |
| ஒவ்வொரு ஆட்டிற்கும்.. .. | 1 00 |

ஆனால் கொல்களத்திற்குள் கொண்டுவரப்படும் விலங்கு எதுவும் கொல்லுவதற்குத் தகுதியற்றதென நிராகரிக்கப்பட்டால் அல்லது கொல்லாது விலக்கப்பட்டால் அவ்விலங்கின்பொருட்டு விதிக்கப்படும் கட்டணம் 50 சதமாயிருக்கும்.

(2) பந்தி ஒன்றின் கீழ் அவ்விலங்கின் பொருட்டு செலுத்த வேண்டிய உரிய கட்டணம் சபைக்குச் செலுத்தப்பட்டு, அக்கட்டணம் செலுத்தப்பட்டமைக்கான அலுவலகப் பற்றுச்சீட்டு ஒன்று கொல்களக் காப்பாளருக்கேனும், அப்பற்றுச்சீட்டு காட்டப்படுவதற்கு தலைவரால் எழுத்தில் நியமிக்கப்படும் வேறு உத்தியோகத்தர் எவருக்கேனும் காட்டப்பட்டாலன்றி கொல்களத்தில் எவ்விலங்கையும் கொல்லவோ அல்லது அப்புறப்படுத்தவோ கூடாது.

11. (1) கொல்களக் காப்பாளர் கொல்களத்தில் கொல்லப்பட்ட எல்லா விலங்கினதும் பதிவேடு ஒன்று வைத்திருக்க வேண்டும்.

(2) இவ்வேடுகள் பொருளளவில் இதற்குள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும்.

12. இவ்வொழுங்கு விதிகளில்—

"தலைவர்" என்பது சபைத் தலைவர் எனப் பொருள்படும்.

"சபை" என்பது எருக்கலம்பிட்டிக் கிராமச்சபை எனப் பொருள்படும்.

"சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர்" என்பது மன்னார் மாவட்ட சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

"கட்டளைச் சட்டம்" என்பது (272 ம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

அட்டவணை

மாட்டின் பற்றுச்சீட்டு இலக்கம் : ————.

வர்ணம் : ————.

நிறம் : ————.

வயது : ————.

குறிசுட்ட அடையாளம் — வலப்பக்கம் : ————.

இடப்பக்கம் : ————.

இறைச்சிக்காரன் பெயர் : ————.

தொழுவத்தினுள் வந்த நேரமும் திகதியும் : ————.

பரிசோதிக்கப்பட்ட திகதி : ————.

கொல்லப்பட்ட திகதி : ————.

கால்நடைகளை ஏற்றுக்கொள்ளும் உத்தியோகத்தரின் முதலெழுத்தொப்பம் : ————.

குறிப்புகள் : ————.

2–1079—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

## களியாட்டவரிக் கட்டளைச் சட்டம்

(267 ம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் மொனராகலை மாவட்டத்திலுள்ள வடக்கு பிந்தனைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால், அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

**தீர்மானம்**

இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து சபையின் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக்கட்டணங்கள் மீது (267 ம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ், இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின் படியான ஒரு வரியை இச் சபை இத்தால் விதித்து அறவிடுகின்றது.

கட்டணத் தொகை

வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம் :—

| | வரிவிகிதம் ரூ. ச. |
|---|---|
| (அ) 10 சதத்துக்குக் குறையாமலும் ஆனால் 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 05 |
| (ஆ) 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 10 |
| (இ) 1 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1.50 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 15 |
| (ஈ) 1.50 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 2.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 20 |
| (உ) 2.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 3.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 30 |
| (ஊ) 3.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 5.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 40 |
| (எ) 5.00 ரூபாவுக்கு மேற்படுமிடத்து தொகையின் 25 சத வீதம் | |

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 8 ந உ.

2–1089—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

## வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம்

செனெற் சபையால் 3.12.1969 இல் நடைபெற்ற அதன் கூட்டமொன்றிலும், பிரதிநிதிகள் சபையால் 20.12.1969 ல் நடைபெற்ற அதன் கூட்டமொன்றிலும் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் பொது மக்கள் அறிவதற்காகப் பிரசுரிக்கப்படுகின்றது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1970 ந் ஆப் பெப்ரவரி மீ 8 ந் உ.

**தீர்மானம்**

" இச்சபை, (268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் 3 (ஆ) பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், முற்கூறிய கட்டளைச் சட்டம், இதற்குள்ள அட்டவணையில் வரையறை செய்யப்பட்டுள்ள பிரதேசத்துக்குள் 1.12.1969 இல் இருந்து நடைமுறையிலிருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கின்றது :—

அட்டவணை

மத்திய மாகாணத்து அனுராதபுர மாவட்டத்திலுள்ள நுவரகம்பலாத மேற்குப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் இருக்கும் விலச்சிய கோறளை தெற்கில் உள்ள நொச்சியாகம கிராமத்தில் அமைந்திருப்பதும் பின்வருமாறு எல்லையிடப்பட்டதுமான நிலப்பரப்பு யாவும்—

வடக்கு : அனுராதபுரம்—புத்தளம் தெருவில் மத்திய ரேகைக்கு செங்குத்தாக, 31 ஆம் மைல் கல்லில், வரையப்படும் ஒரு ரேகையில வடக்கே 350 யார் தூரத்தில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து வடகிழக்கு முகமாக சொல்லப்பட்ட தெருவின் மத்திய ரேகைக்குச் சமாந்தரமாக 350 யார் தூரத்தில் சொல்லப்பட்ட தெருவின் மத்திய ரேகைக்கு செங்குத்தாக, 33 ஆம் மைல் கல்லில் வரையப்படும் ஒரு ரேகையை வெட்டும்வரை வரையப்படும் ஒரு ரேகை.

கிழக்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட புள்ளியிலிருந்து முற்சொன்ன செங்குத்துரேகை மார்க்கமாக சொல்லப்பட்ட தெருவை, 33 ஆம் மைல் கல்லின் அடியில், கடந்து சொல்லப்பட்ட தெருவின் மத்திய ரேகையும் சொல்லப்பட்ட செங்குத்து ரேகையும் ஒன்றையொன்று வெட்டும் புள்ளியிலிருந்து 350 யார் தூரத்திலுள்ள ஒரு புள்ளிக்கு வரையப்படும் ஒரு ரேகை.

தெற்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட புள்ளியிலிருந்து தென்மேற்கு முகமாக அனுராதபுரம்—புத்தளம் தெருவின் மத்திய ரேகைக்கு சமாந்தரமாக 350 யார் தூரத்தில் சொல்லப்பட்ட தெருவின் மத்திய ரேகைக்கு செங்குத்தாக 31 ஆம் மைல் கல்லில், தெற்குமுகமாக வரையப்படும் ஒரு ரேகையை வெட்டும் புள்ளிவரை, வரையப்படும் ஒரு ரேகை.

மேற்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட புள்ளியிலிருந்து சொல்லப்பட்ட செங்குத்துரேகை மார்க்கமாக, வடமேற்கு முகமாக, சொல்லப்பட்ட தெருவை 31 ஆம் மைல் கல்லின் அடியில் கடந்து கொண்டு பிரதேசத்தின் வடக்கு எல்லையின் தொடக்கப் புள்ளிக்கு வரையப்படும் ஒரு ரேகை ".

2—1102—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

## இறக்வானை பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

### 1970 க்கான விசேட தண்ணீர் வரி

(256 ம் அதிகாரமாம்) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின 129 (ஆ) ஆம் பிரிவின்படியும், அப்பிரிவினால் அன்னாருக்கு அளிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும் துணை விதிகளினால் விதிக்கப்படக்கூடியனவாய வரம்புகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் அமைவாகவும் இறக்வானை பட்டினத்திலுள் அமைந்துள்ள நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தப் பெறுமதியில் நூறுக்கு மூன்று வீதமானதும், முறையே மார்ச்சு 31, ஜூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில், நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1970 ஆம் ஆண்டுக்கு இறக்வானை பட்டின சபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆப் பெப்புருவரி மீ 8 ந உ.

2—1093—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

## வத்தேகமம் நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

### 1970 க்கான விசேட தண்ணீர் வரி

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ) பிரிவின்படியும், அப்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும், துணை விதிகளினால் விதிக்கப்படக்கூடியதாய வரைமுறைகளுக்கும் விதிவிலக்குகளுக்கும், அமைவாகவும் வத்தேகம நகர சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் அமைந்துள்ள நெற்காணிகள் தவிரவுள்ள நிலையான ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமானதும், முறையே மார்ச்சு 31, ஜூன் 30, செத்தெம்பர் 30 திசம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1970 ஆம் ஆண்டுக்கு வத்தேகம நகரசபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1970 ந் ஆப் பெப்ரவரி மீ 8 ந் உ.

2—1091—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

### 17ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257), 17 (5) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம், அன்ரனி அல்பிறற் ஜோசப் ஆகிய நான் இதன் அட்டவணையின் பத்தி 1 ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணையின் பத்தி 2 ல் உள்ள எற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி 3 ல் உள்ள எற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி 4 ல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகின்றேன்.

அ. அ. ஜோசப்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாண அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆப் பெப்ரவரி மீ 19 ந உ.

அட்டவணை

| பத்தி (1) கிராமச் சபையின் பெயர் | பத்தி (2) திகதி | பத்தி (3) நேரம் | பத்தி (4) இடம் |
|---|---|---|---|
| அச்சுவேலி | 10.3.70 | மு.ப. 10.00 | கிராமச் சபை அலுவலகம், அச்சுவேலி. |

2—1126—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

## புசல்லாவைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

### 1970 க்கான விசேட தண்ணீர் வரி

(256 ம் அதிகாரமாம்) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) ஆகிய பிரிவின் படியும், அப்பிரிவினால் அன்னாருக்கு அளிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும், துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியனவாய வரையறைகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் அமைவாகவும் புசல்லாவைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தப் பெறுமதியில் நூற்றுக்கு ஆறு வீதமானதும், முறையே மார்ச்சு 31, ஜூன் 30, செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தற்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1970 ம் ஆண்டுக்குப் புசல்லாவைப் பட்டினசபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 8 ந உ.

2–1092—27.2.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,895

## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

1. **படிகள்.**—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி வீட்டு வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க்கைப்படி ஆகியவை அரசாங்க விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்பட்டுள்ளன.

2. **சேவை நிபந்தனைகள்.**—உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் (அதிகாரம் 264) ஏற்பாடுகளுக்கும், அவற்றினது திருத்தங்கள் எதனிற்கும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்படும் மற்றைய சேவை நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாய் நியமனங்கள் அமையும்.

3. **வேலைக்கமர்த்துவதற்கான நியதிகள்.**—1952 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற்றோடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின்கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரியனவாகும்.

(அ) அரசாங்கத்தின் கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள் இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களின், அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும்போதும் கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைத் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டுள்ளவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர் முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(இ) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில் 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஈ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு உரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(உ) உள்ளூராட்சிச் சேவையின், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடையவராக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம், பொதுவாக மூன்றாண்டு காலத்துக்குத் தகுதிகாண் நிலையில் அல்லது அதற்கப்பால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாக அமையும்.

(எ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக்கத்தாட்சியாக தமது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். சத்தியக் கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால் விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி, காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில், இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர் " களின் தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் " அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்தற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலை பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலை பரீட்சார்த்த காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை, பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்தாயிருக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியடையத்தவறினால் வேதனப் பெருக்கு இடைநிறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறையையும் கடந்த நீடித்த காலவரையறையுள் சித்தியடையத் தவறினால், வேதனப் பெருக்கின் இடைநிறுத்தம் பூரணமாகவே நிறுத்தப்பட்டதாகிவிடும். பரீட்சை சித்தியடையும் காலம்வரை இப்பூரண நிறுத்துகை செயற்படும். (13,387 இலக்கத்தையும், 9.11.62 தேதியையும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை உத்தியோக கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்).

**(இ) கல்வியும் ஏனைய தகைமைகளும்**

சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லா சேர்வுத் திட்டங்களினும், சிங்கள மொழியில் கல்விபயின்ற சிங்களப் பரீட்சார்த்தி சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான பரீட்சையில், சிங்கள மொழியில் அல்லது அதற்குச் சமமானதில், சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ந் தேதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவையில் உள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெற விரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

**(ஈ) வினைத்திறமைகாண் தடைகள்**

புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்கு, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில், சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருக்கும். சித்தியடையத் தவறினால் உத்தியோகத்தரின் வேதனப் பெருக்கம் முதல் இடைநிறுத்தப்படும். இரண்டாவதாக நிறுத்தப்படும், அதன்பின் பின்போடப்படும்.

**(iv)** சிங்கள மொழிமூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

**(v)** தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த கால முடிவில், சிங்களத்தில் விதித்த தேர்ச்சிகாண் தரத்தை எய்தமுடியாவிட்டால், உள்ளூராட்சி சேவை நிபந்தனைகள் 21 னதும் 22 னதும் ஏற்பாடுகள் பொருத்தமாகும்

"(மேற்சொன்ன (iii) (அ), (ஆ) (iv) ஆகியவை, தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்பட்டவர்களுக்கே பொருத்தமாகும்)."

குறிப்பு.—(1) இதில் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் " என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகினறது.

(2) மேற்கண்ட பந்தி 4 (3) (அ) (ஆ) (ஈ) இல் உள்ள ஏற்பாடுகள் அரசாங்கத் திணைக்களங்களில் சேவிக்கும் " பழைய சேர்வு உத்தியோகத்தர்களும் உள்ளூராட்சிச் சேவையில் நியமனங்களை ஏற்றுக் கொள்வதற்குத் தமது பதவிகளில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தா."

**5. வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாம் இலஙகையர் என்பதையும் திருப்திகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராடசிச் சேவைக்கு ஆட்சேர்த்தல பற்றிய சகல தேவைகட்கும் " இலஙகையர் " என்னும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப் படுகிறது.

**6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை**

(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எலலைக்குள் தம்மைக் கொணடுவர உதவும் விதத்தில, தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிபபதறகு, போர்ப்படையிற் சேவைசெய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கபபடுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத்திட்டத்தில் விதந்துரைக் கப்பட்ட மிகக்குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துககுறைவான பரீடசையைத் தமது மிககுறைந்த கலவித் தகைமையாகக் கருதுவதற்குப் போரபபடை வீரர்கள் அனுமதிக்கபபடுவர்.

**7. வயதுச் சலுகை.**—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தர பதவிகள் வகிககும் உள்ளூராட்சிமன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆடசிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தபபடும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிபபதறகுத் தகுதியுடையவராவர்.

**8. வேண்டற்பால ஏனையவை.**—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாறறுபவர்களின் விண்ணபபங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராடசித் தாபனத்தின் மாநகர சங்க அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பபபடுதல வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப் பங்கள், அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பபபடுதல் வேண்டும். அரசாஙக சேவையில நிரந்தர பதவிகளை வகிககும் உத்தியோகத்தர்களுடைய விண்ணபபங்களின விடயத்தில் விண்ணப்பக்காரர் தெரிவு செயயப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இலலையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைககோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேடசகர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச் சானறிதழைக் கொடுபபதன் மூலம் அதனைச் செயயலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவவிதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தேர்நதெடுப்பதற்கு எவ்விதமான முயறசியும் செய்தலேனும் அவவபேடசகாகளுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முனனர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும். தெரிவிறகுப் பினனர் காணபபடின் அவர் வேலையிலிருநது நீக்கபபடுவதறகுப பாத்திரராவா.

(vi) இவவிளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணககமாயிலலாத விண்ணபபஙகள் நிராகரிககப்படும்.

(vii) " கீழே இணைக்கபபட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப் படடு உள்ளூரா ஆடசிச்சேவை அதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப் படவேண்டும். நேரடியாக அவருடைய பெயருககு அவை அனுப்பபபடக் கூடாது."

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போயவிட்டதோ அல்லது, தாமதமாகிவிடடதோ என்ற குற்றசசாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள் கின்றனர்.

### வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய
### விண்ணப்ப மாதிரிப் பத்திரம்
### உள்ளூராட்சிச் சேவை

**முக்கியமாகக் கவனிக்க.**—(i) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1 என்ற விலாசத்தை அடையும்வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை தலைவரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களைச் சித்தஞ்செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப் பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயபபடுத்திக் கொள்ளவேணடுமென்று ஆலோசனை கூறப் படுகின்றது. விண்ணப்பகாரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறுது கொடுக்க வேண்டும்.

(iii) விண்ணப்பகாரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர் களின் விண்ணப்பத்துடன் இணைககவேண்டும் :—(1) பிறப்புச் சான்றிதழ் (2) ஆங்கிலத்தில்-சிங்களததில-தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சானறிதழ், (3) குணச் சான்றிதழ், (4) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்-தொழில்நுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பகாரர்கள் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

............................. பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.

   (ஆ) ........................... பதவிக்கான விண்ணப்பம் முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.

2. தேசீய இனம் :————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரை விலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையா யிருப்பின் பிரசாவுரிமைச் சானறிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக)

3. தபால் விலாசம் :————.
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்).

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :————.
   ... ..வருடங்கள் ......மாதங்கள் ........நாட்கள்

   (ஆ) பிறந்த திகதி :————.

5. பிறந்த இடம் :————.
   (அ) விண்ணப்பக்காரர் :————.
   (ஆ) அவரது பிதா :————.
   (இ) அவரது பிதாவழிப்பேரன் :————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.

   (விண்ணப்பகாரர் இலஙகையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒனறில (ஆ) வை அலலது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல வேணடும். விண்ணபபகாரா இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒனறில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரபபுதல் வேண்டும்).

6. விவாகமானவரா, தனியாளரா, தாரமிழந்தவரா அல்லது கைம் பெண்ணா :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற்—தொழில்நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1. .................... | .......... | .......... | 1. .................... | .......... | .......... |
| 2. .................... | .......... | .......... | 2. .................... | .......... | .......... |
| 3. .................... | .......... | .......... | 3. .................... | .......... | .......... |
| 4. .................... | .......... | .......... | 4. .................... | .......... | .......... |
| 5. .................... | .......... | .......... | 5. .................... | .......... | .......... |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் :————.

(அ) சிங்களம் :————.

(ஆ) ஆங்கிலம் :————.

(இ) தமிழ் :————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் :————

11. பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) :————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின் சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன். விபரமாக விளக்குக :————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :————.

(i) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(ii) தற்போதைய சம்பளமும்(படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(iii) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழி பெயர்க்கும் தேர்ச்சியுண்டா ?

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா? உண்டெனில் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக) :—

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா? உண்டெனில் அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா? இல்லையாயின் எவ்வளவுக்கு கடனாளியாக இருக்கின்றீர் :————.

16. வேறு ஏதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன :————.

17. யார் யாரிடமிருந்து குணச்சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல்வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியதில்லை :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும் நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————.

திகதி :————. விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

தலைவர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530.
கொழும்பு 1.

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### கால்நடைப் பரிசோதகர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வேதனம் வருமாறு:- வருடாந்தம் ரூ. 3,576 — 15 × 144 — 5,736. வருடாந்தம் ரூ. 4,584 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. **வேண்டிய தகைமைகள்**

(அ) 15.3.70 ல் 40 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

(ஆ) (1) அங்கீகரிக்கப்பட்ட நிலையத்தின் பாற்பண்ணையியல் அல்லது கால்நடைவளர்ப்பில் ஒரு தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது, பேரதேனியா கிருஷிகக்கல்லூரியின் சான்றிதழ்ப் பயிற்சி வகுப்புபபத்திரம் பெற்றிருத்தல வேண்டும்.

(2) கால்நடைவளர்ப்பு வேலையில் பரீட்சார்த்திகள் அநுபவம் பெற்றிருத்தல் வேண்டும். கால்நடைகளைக் கைப்பிடித்தல் முகாமை ஆகியவற்றில் அனுபவம் அவசியம் தேவை. நல்ல திடகாத்திரமுளளவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும்.

4. வயதும் தொழிலுக்குரிய தகைமைகளும் எவ்வாறிருப்பினும் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள சிரேட்ட மிருகவைத்திய ஓவர்சியர்

களிடமிருந்து வரும் விண்ணப்பங்களும் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப் படும். ஆனால் 15.3.70 ல் மிருகவைத்திய வேலையில் 10 வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற்றிருப்பதுடன் அவர்கள் வேலைகள் நடத்தையும் திருப்திகரமாகவும் இருத்தல் வேண்டும்.

5. இவ்வர்த்தமானியில் IV வது பகுதியில் தொடக்கத்தில் பிரசுரமாகியிருக்கும் உள்ளூராட்சிப் பதவிகளுக்கு நியமனங்கள் சம்பந்தமானதுடன் தொடர்புடைய பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 15.3.70 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும். குறிப்பிட்ட படிவத்திலுள்ள 13 ம், 16 ம் அம்சங்களுக்குப் பதிலாகப் பின்வருபவை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

" 13. (அ) பாற்பண்ணையியல் அல்லது கால்நடை வளர்ப்பில் அல்லது இரண்டிலும் தகைமைகள் (பெறப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.)

(ஆ) மேற்படி தகைமைகள் எந்த நிலையத்திலிருந்து பெறப்பட்டன, இத்தகைமைகளைப் பெற்ற திகதி :—

16. பின்வருவனவற்றுள் உள்ள அனுபவம் :—

(அ) கால்நடை வளர்ப்பு வேலை.

(ஆ) கால்நடைகளைக் கைப்பிடித்தல், முகாமை.

(இ) பொதுவான மிருக வைத்தியசாலை."

7. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப்பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சிபார்சு செய்து சான்றுரைத்தாலன்றி அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் முடிவு திகதியின் பின் இரு வாரங்களுக்குள் விண்ணப்பப்பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

ஏ. பி. சமரஜீவா,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1,
9.2.1970.

2–1080—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### தியணைக்கும்படை—பிரதம உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—மேற்படி பதவிக்கான வேதனக் கிரமம் பின்வருமாறு :—வருடாந்தம் ரூ.6,720 — 12 × 360 + 5 × 480 — ரூ.13,440. வருடாந்தம் ரூ. 9,240 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. திருமணமான உத்தியோகத்தர்களுக்கு, அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருத்தமான, வீதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க ஒரு திருமணப்படியும் கொடுக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள், வருடாந்தம் ரூ. 8,880 க்கு மேற் பெறுவதற்குமுன், லண்டன் தியணைப்பு என்ஜினியர்கள் கலாசாலையால் நடாத்தப்படும் பட்டப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

3. **வேண்டிய தகைமைகள் :**

(அ) வயது 31.3.1970 ல் 35 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் நன்கு மதிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலையின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும் (பி. எஸ். ஸி. பட்டம் உடையவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்) அவர்கள் குறைந்தது 5′ 4″ உயரமும், 125 றாத்தல் நிறையும் உடையவராயிருப்பதோடு, நல்ல உடலமைப்பும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(இ) பொதுப்பரீட்சையில், தியணைப்பு இயந்திரவியலில் தராதரம் பெற்றவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஆனால் அப்படியான விண்ணப்பதாரர்கள் ஜி. ஸி. ஈ. (உயர் தரம்) பரீட்சையில், 3 விஞ்ஞான பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்தவராயிருத்தல் வேண்டும்.

4. இந்த அரசாங்க வர்த்தமானியின் IV ம் பகுதியின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் உள்ளூராட்சிச் சேவையின் பதவி நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கிணங்க, இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் விண்ணப்ப தாளில் விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு, 31.3.1970 தேதிக்குப் பிந்தாமல் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

6. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சி சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள், குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால், அப்படியுள்ள விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ தங்களாற் பெறப்பட்டன என்று, திணைக்களத்தலைவர், மாநகரசபை ஆணையாளர், அல்லது உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும்படி சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

ஏ. பி. சமரஜீவா,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

த. பெ. 530, கொழும்பு 1,
15.2.1970.

2–1081—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

# துணை விதிகள்

## தங்கொட்டுவைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 256)

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் தங்கொட்டுவைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 8 ந் வ.

### துணைவிதிகள்

சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் வாகன, மிருகவரி சம்பந்தமான நியமத் துணைவிதிகளின் நோக்கத்துக்காக பின்வருவன இதன்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் வாகனங்களுக்கான வேறுபடுத்திக் காட்டும் எழுத்துக்களாக இருத்தல் வேண்டும் :—

பைசிக்கிள் அல்லது திரிசைக்கிள் அல்லது பைசிக்கிள்கார் அல்லது வண்டி அல்லது திரிசைக்கிள்கார் அல்லது வண்டி ஒவ்வொன்றுக்கும்—

| | |
|---|---|
| (அ) வியாபார நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படின் | ද. වෙ. බ. |
| (ஆ) வியாபாரமல்லாத வேறு நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படின் .. | ද. බ. |
| இரட்டை மாட்டு வண்டி அல்லது பயண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | ද. ක. |
| ஒற்றைமாட்டு வண்டி அல்லது பயண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | ද. ත. ක. |
| கைவண்டி ஒவ்வொன்றுக்கும் .. | ද. අ. ක. |
| ஜின்ரிக்ஷோ ஒவ்வொன்றுக்கும் .. | ද. රි. |

2–1105—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

## கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் மாத்தறை மாவட்டத்திலுள்ள பெரலபனுத் தறைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆவது உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத் தைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதி.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1970 ம் ஆண்டு ஜனவரி மீ 27 ந் உ.

### துணை விதி

பெரலபனுத்தறைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஆக்கப் பட்டு 1956 மாச்சு 23 ந் திகதிய 10,905 ஆம் இலக்கக் கசெற்றில் பிர சுரிக்கப்பட்ட துணை விதிகள் அபாயகரமானவையும் அருவருப்பான வையுமான தொழில்கள் சம்பந்தமான துணைவிதியில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) அவற்றின் (1) ஆவது பந்தியில், கடைசி விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :—

" மோட்டார் கராஜ் ஒன்று வைத்திருத்தல்.

தேயிலைப் பெட்டிகள் உற்பத்தி செய்தல்.

தளபாடங்கள் உற்பத்தி செய்தல்.

பைசிக்கிள் திருத்தும் வேலைக்கூடமொன்று வைத்திருத்தல்.

ரயர்களையும் ரியூப்களையும் வல்கனைஸ் செய்யும் நிறுவன மொன்று வைத்திருத்தல். ",

(2) அவற்றின் (2) ஆவது பந்தியில், கடைசி விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :—

" சுருட்டுகள் உற்பத்தி செய்வதற்கு நிறுவனமொன்று வைத் திருத்தல்."

2–1106—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

## கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் குருநாகல் மாவட்டத்திலுள்ள ஹொரொம்பா வைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆவது உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத் தைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதி.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1970 ம் ஆண்டு ஜனவரி மீ 27 ந் உ.

### துணை விதி

1964 சனவரி 24 ந் திகதிய 13,931 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப் பட்ட அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள் சம்பந்தமான துணைவிதிகள்.

(1) 1 ஆவது துணைவிதியின் இறுதியில் பின்வரும் தொழில்களைச் சேர்ப்பதன் மூலமும் :—

" 10. பைசிக்கிள் திருத்தும் நிறுவனமொன்று வைத்திருத்தல்.

11. மோட்டார் கராஜ் ஒன்று வைத்திருத்தல்.

12. மோட்டார் வாகனங்கள் திருத்தும் நிறுவனமொன்று வைத் திருத்தல்.

13. காலையொன்று வைத்திருத்தல்."

(2) 2 ஆவது துணைவிதியின் இறுதியில் பின்வரும் தொழிலைச் சேர்ப்பதன் மூலமும் :—

"17. வெட்டுமரக்காலையொன்று வைத்திருத்தல்."
இதனால் திருத்தப்படுகின்றன.

2–1116—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

## ராகமைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் ராகமைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1969 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 12 ந் உ.

### துணை விதி

ராகமைப் பட்டின சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியமத்துணை விதிகளின் 22 ஆம் பாகத்தின் 3 ஆம் துணைவிதியின் நோக்கங்களுக்கு வாகனங்களைப் பிரித்துக்காட்டும் எழுத்துக்கள் பின்வருமாறிருத்தல் வேண்டும் :—

| | |
|---|---|
| ஒரு மோட்டார்கார், மோட்டார் திரிக்கார், லொறி, மோட்டார் பைசிக்கிள், வண்டில், கைவண்டில், ஜின்றிக்ஷோ, பைசிக்கிள் அல்லது திரிசைக்கிள் தவிர்ந்த வேறு வாகனம் ஒவ்வொன்றுக்கும் .. | ර. ඝ. ව. |
| பைசிக்கிள் அல்லது திரிசைக்கிள், அல்லது பைசிக்கிள் கார் அல்லது வண்டில் அல்லது திரிசைக்கிள்கார் அல்லது வண்டில் ஒவ்வொன்றுக்கும் — | |
| (அ) தொழில் நோக்கங்களுக்காக உபயோகிக்கப் படின் .. .. .. | ර. ඝ බ.වෙ. |
| (ஆ) தொழில் அல்லாத வேறு நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படின் .. .. | ර. ඝ. බ. |
| எந்த விவரணத்துடன் கூடிய இரட்டைமாட்டு வண்டில் ஒவ்வொன்றுக்கும் .. .. | ර. ඝ. බ. ක. |
| எந்த விவரணத்துடன் கூடிய ஒற்றைமாட்டு வண்டில் அல்லது பயணவண்டில் ஒவ்வொன்றுக்கும் .. | ර. ඝ. ක. |
| கைவண்டில் ஒவ்வொன்றுக்கும் .. .. | ර. ඝ. අ. |

2–1107—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள மாரப்பனைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ம் உட்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூ ராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1.
8.2.1970.

### துணைவிதிகள்

#### கட்டிடங்களும் எல்லைச் சுவர்களும்

1. எந்த நபரும், கிராமப் பிரதேசத்துக்குள் புதிய கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் வழி எதையும்—

(அ) எந்தக் கிராம வண்டில் வீதியின் மத்தியிலிருந்து பதினைந்தடி தூரத்துக்குள்

(ஆ) காலக்கிரமத்தில் ஒரு கிராம வண்டில் வீதியாக மாற்றியமைக் கப்படுமென்று சபை தெரிவித்துள்ள எந்தக் கிராமப் பாதையின் மத்தியிலிருந்து பதினைந்தடி தூரத்துக்குள் ; அல்லது

(இ) (ஆ) ம் உப–பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாதை தவிர்ந்த வேறு எந்தக் கிராமப் பாதையின் மத்தியிலிருந்து ஏழடி தூரத்துக்குள்

நிறுவக்கூடாது.

2. எந்த நபரும் கிராமப் பிரதேசத்துக்குள் 1 ம் துணைவிதியில் கூறப்படுள்ள வண்டில் வீதி அல்லது பாதை ஓரமாகப் புதிய கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் வழி எதனையும், தலைவருக்குக் குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு முன்னராவது எழுத்தில் அறிவித்தில் கொடுக்கமால், நிறுவக்கூடாது.

**அலைந்து திரியும் ஆடுமாடுகள்**

3. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளில் 24 ம் பகுதியின் 3 ம் துணைவிதியின் (1) ம் பந்தியின் கீழ் பட்டியிலடைக்கப் பட்ட எந்த மிருகத்தையும் அகற்றுவதற்குமுன்பு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் பின்வரும் விகிதங்களில் கணிக்கப் பட்டு அறவிடப்படவேண்டும் :—

(அ) பட்டியிலுள்ள ஒவ்வொரு மிருகத்துக்கும் இரண்டு ரூபா ஐம்பது சதம்.

(ஆ) மேற்கூறிய கட்டணத்துடன்—

(1) பட்டியில் வைக்கப்பட்டுள்ள மிருகம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இரவுக்கும் இரண்டு ரூபா, அத்துடன்.

(2) பகலில் பட்டியில் வைக்கப்பட்டுள்ள அல்லது கட்டிவைக்கப் பட்டுள்ள மிருகம் ஒவ்வொன்றுக்கும் ஐம்பது சதம்.

**தொல்லைகுறைத்தல்**

4. எந்த நபரும், கிராமப் பிரதேசத்துக்குள் இசைத்தட்டு இசைக்கும் கருவி (கிராமபோன்), வானொலிப்பட்டி, ஒலிபெருக்கி, ஒலிபரப்புக் கருவி, அல்லது இதே விதமான வேறெந்தக் கருவி எதையும் இயக்குவதன்மூலம் அல்லது வேறெந்த நபரால் இயக்கச் செய்வதன்மூலம் அல்லது இயக்க அனுமதிப்பதன் மூலம், அதன் ஒலித்தன்மை அல்லது மீண்டும் மீண்டும் அதனை ஒலிபரப்பும் தன்மை அல்லது அதனைத் தொடர்ச்சியாக ஒலிபரப்பும் தன்மையின் காரணமாக அயலில் குடியிருப்பவர்களுக்குத் தொல்லை விளைவிக்கும் ஒலி எதையும் உண்டாக்க அல்லது மீள உண்டாக்க அல்லது உண்டாக்கச் செய்ய அல்லது மீள உண்டாக்கச் செய்யக் கூடாது.

5. 4 ம் துணைவிதியை மீறியது சம்பந்தமாக, மேற் கூறப்பட்டுள்ள கருவி எதையும், ஒரு வீதி, பொது இடம், கடை அல்லது வியாபார ஸ்தலம் அல்லது வீதி அல்லது பொது இடம் எதையும் அடுத்திணைந்ததும் பொதுமக்கள் அனுமதிக்கப்படுவதுமான இடம் எதையும் தவிர்ந்த எந்த இடத்திலும் இயக்கும் அல்லது வேறெந்த நபரைக் கொண்டும் இயக்கச் செய்யும் அல்லது இயக்க அனுமதிக்கும் எந்த நபருக்குமெதி ராக—

(அ) தொல்லையால் பாதிக்கப்பட்ட அயலில் வசிக்கும் மூன்று குடியி ருப்பாளர்களுக்குக் குறையாத நபர்களால் தொல்லை பற்றி முறைப்பாடு செய்திருந்தாலன்றியும் ;

(ஆ) கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் தன்மைபற்றிக் குறிப்பிட்டு உடனடியாக அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அத் தொல்லை குறைக்குமாறு அந்த நபரை வேண்டி அந்நபருக்குத் தலைவரால் எழுத்தில் அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி யும் ;

(இ) அந்த அறிவித்தல் கிடைத்தவுடன் அல்லது அதன்கண் குறிப் பிட்டுள்ள காலத்துக்குள் அதற்கேற்றவாறு அவ்வாறான அறிவித்தலுக்கு அமைந்து நடக்க அந்த நபர் தவறியிருந் தாலன்றியும் அல்லது மறுத்திருந்தாலன்றியும் ;

நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படக்டாது.

**உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்**

6. தலைவர் சபைக்குச் சேரவேண்டிய சகல வரிகளையும் அல்லது கட்டணங்களையும் சேகரித்துத் தலைவரின் படியுருவக் கையொப்பத்தையும் சபையின இலச்சினையையும் தாங்கிய அச்சிட்ட பற்றுச்சீட்டுகளை வழங்கு வதற்கு எந்த உத்தியோகத்தருக்கும் அல்லது வேறெந்த நபருக்கும் எழுத்தில் அதிகாரம் வழங்கலாம்.

7. எந்த நபரும் வேண்டுமென்று—

(அ) தலைவரை அல்லது சபையின் வேறெந்த உத்தியோகத்தரை, கட்டளைச் சட்டத்தின் எந்த ஏற்பாட்டினுலும் அல்லது ஏற்பாட டின் கீழும் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எத்துணை விதியினுலும் அல்லது எத்துணைவிதியின் கீழும் அவ்வாறான தலைவரின்பேரில் அல்லது இதர உத்தியோகத்தரின்பேரில் அளிக்கப்பட்டுள்ள அல்லது விதிக்கப்பட்டுள்ள அல்லது சாட்டு தல் செய்யப்பட்டுள்ள அதிகாரம், கடமை, அல்லது தொழிற் பாடு எதையும் செலுத்துவதில், செய்வதில் அல்லது நிறைவேற்றுவதில், அல்லது

(ஆ) சபையினுல் அல்லது அதன் சார்பில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஊழியர் அல்லது தொழிலாளி எவரையும், தலைவரால் அல்லது சபையின் வேறெந்த உத்தியோகத்தரால் அவ்வாறான ஊழியர் அல்லது தொழிலாளிமீது சட்டபூர்வமாக விதிக்கப்பட்டுள்ள கடமை எதையும் நிறைவேற்றுவதில்

தடைசெய்யக்கடாது.

8. இத்துணைவிதிகளில்—

"தலைவர்" என்பது சபைத் தலைவர் எனப்பொருள்படும்.

"சபை" என்பது கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை என்பொருள் படும்.

"கட்டளைச் சட்டம்" என்பது கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

"கிராமப் பிரதேசம்" என்பது இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள மாரப்பனைக் கிராமப் பிரதேசம் எனப்பொருள்படும்.

2–1098—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் கண்டி மாவட்டத்திலுள்ள கந்தஹய தெற்கு இல. 1 பாத்த ஹேவாஹெற்ற கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆவது உட்பிரிவினுல் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 8 ந் உ.

**துணைவிதி**

**மலகூடக் கட்டணம்**

கந்தஹயதெற்கு இல. 1 பாத்த ஹேவாஹெற்றக் கிராமச் சபையினுல் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் நியமத்துணை விதிகளின் 6 வது பாகத்தின் 6 ஆவது துணைவிதியின் நோக்கங்களுக்கு கிராமச் சபைக்கு செலுத்தப்படற்பாலதான மலகூடக் கட்டணம், மலமகற்றப்படும் ஒவ் வொரு வாளிக்கும் மாதமொன்றுக்கு இரண்டு ரூபாவாக இருத்தல் வேண்டும்.

2–1099—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

L. D. B. 79/47

## நுவரெலியா மாவட்டத்திலுள்ள ரம்பொடைக் கோறளைக் கிராமச் சபை

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் நுவரெலியா மாவட்டத்திலுள்ள ரம்பொடைக் கோறளைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினுல் ஆக்கப்பட்டு அப்பிரிவினுல தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 8 ந் உ.

## துணைவிதி

நுவரெலியா மாவட்டத்திலுள்ள ரம்பொடைக் கோறளைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தைகள், முழுநாட்சந்தைகள் ஆகியவை சம்பந்தமான நியமத்துணைவிதிகளில் xxvii ஆம் பகுதியின் 1 ஆம் துணைவிதியின் நோக்கங்களுக்காக, கட்டுப்பாட்டுக்குச் சந்தைக்கான சந்தைப் பிரதேசம் சந்தையிலிருந்து அரை மைல் ஆரையைக் கொண்ட ஒரு வட்டத்துக்குள் உள்ள பிரதேசமாக இருத்தல் வேண்டும்.

2-1100—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

---

L.D.B. 12/47

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் மாத்தறை மாவட்டத்திலுள்ள நாவிமனை-மகவிற்றைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆவது உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 8 ந் உ.

கட்டிடம், எல்லைச்சுவர் ஆகியவற்றை நிர்மாணிப்பது சம்பந்தமான துணைவிதிகள்.

1. (1) கிராமப் பிரதேசத்துக்குள் எவரும் புதிய கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் முகப்பு எதனையும்—

(அ) எந்தக் கிராம வண்டித் தெருவின் மத்தியிலிருந்து இருபதடி தூரத்துக்கும்,

(ஆ) காலக்கிரமத்தில் ஒரு கிராம வண்டித் தெருவாக மாற்றப்படவிருக்கும் பாதையெனச் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள எந்தக் கிராமப் பாதையின் மத்தியிலிருந்து இருபதடி தூரத்துக்குள், அல்லது

(இ) (ஆ) ஆகிய பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாதை தவிர்ந்த வேறெந்தக் கிராமப் பாதையின் மத்தியிலிருந்து எழடி தூரத்துக்குள்

எழுப்பக்கூடாது.

(2) தலைவருக்கு அது பற்றி முப்பது தினங்களுக்கு முன்னராவது எழுத்திலான அறிவித்தல் கொடுக்காமல் எவரும் (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த வண்டித் தெரு அல்லது பாதை ஓரமாகவும் கட்டிடம், எல்லைச்சுவர், அல்லது வாயில் முகப்பு எதனையும் எழுப்பக்கூடாது.

2. இத்துணைவிதிகளில்—

" தலைவர் " என்பது சபைத் தலைவர் எனப்பொருள்படும்.

" சபை " என்பது மாத்தறை மாவட்டத்திலுள்ள நாவிமனை-மகவிற்றைக் கிராமச் சபை எனப் பொருள்படும்.

" கிராமப் பிரதேசம் " என்பது நாவிமனை-மகவிற்றைக் கிராமச்சபையின் கிராமப் பிரதேசம் எனப்பொருள்படும்.

2-1108—27.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,895

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட **வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் ஏதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | 2.1·70 | வெள்ளி | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3·30 |
| | 9.1·70 | வெள்ளி | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3·30 |
| | 16.1·70 | வெள்ளி | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3·30 |
| | 23.1·70 | வெள்ளி | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12·00 |
| | 29.1·70 | வியாழன் | 21. 1.70 | புதன் | ந. ப. | 12·00 |
| பெப்புருவரி | 5.2.70 | வியாழன் | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| மாச்சு | 5.3.70 | வியாழன் | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி | 5. 3.70 | வியாழன் | பி. ப | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி | 13. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.3.70 | வியாழன் | 20. 3.70 | வெள்ளி | பி. ப | 3.30 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ஆம் ௵ திசெம்பர் ௴ 14 ஆந் ௳.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.